நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42 ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

S.C.No.42/2022

<u>அ.த.சா: 1 (LW–7) சாட்சியின் சான்றுரை</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வக்குமார் | சாதி | : | |
| தந்தை பெயர் | : | காளிராஜ் | தொழில் | : | ஓட்டுநர் |
| கிராமம் | : | காமராஜபுரம் | மதம் | : | |
| வட்டம் | : | போடிநாயக்கனூர் | வயது | : | 44 |

04–10–2023 நாளன்று 1969 ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது
-----------------------------------------------------------------------

(1 வது எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டார்.)

<u>முதல் விசாரணை:</u>

நான் காமராஜபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். மருத்துவர் விவாகர் எனது உறவினர். சாட்சி ரெங்கசாமி எனது தாத்தா. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான், அந்த கையொப்பம் **அ.சா.ஆ–1** ஆகும். 01–04–2011 ம் தேதியில் நான், எனது தாத்தா, எனது தாயார் அனைவரும் எனது சித்தப்பா கிருஷ்ணமூர்த்தியை பார்ப்பதற்காக சென்றோம். அப்பொழுது ரத்தினம் நகரில் எனது சித்தப்பா கிருஷ்ணமூர்த்தியின் வீட்டிற்கு முன்பு போலீசார் வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். படித்து பார்த்துவிட்டு சாட்சியாக கையொப்பம் போடுமாறு போலீசார் சொன்னார்கள், நானும், எனது தாத்தாவும் கையொப்பம் போட்டுக் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u> –

பார்வைமகஜரை நான் படித்து பார்த்தேனா என்றால் போலீசார் சொன்னதன் அடிப்படையில் நானும், எனது தாத்தாவும் கையொப்பம் போட்டுக் கொடுத்தோம். நாங்கள்

**கையொப்பம் போட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.**

**மறுவிசாரணை – இல்லை.**

*Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.*

V SURESH
Digitally signed by V SURESH
Date: 2023.10.04 17:32:20 +0530

Chief Judicial Magistrate,
Theni.